කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව
முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்
DEPARTMENT OF MANAGEMENT AUDIT

මුදල් අමාත්‍යාංශය
මහලේකම් කාර්යාලය, කොළඹ-01

நிதி அமைச்சு,
செயலகம், கொழும்பு 01

Ministry of Finance
The Secretariat, Colombo 01

මගේ අංකය / எனது இல / My No: DMA/P/2017/8-3

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2017. 02. 15.

முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றிக்கை 1/2017

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறைச் சபைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்,

<u>**வெளிநாட்டுதவியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்ளகக் கணக்காய்வு உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்**</u>

முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றிக்கை 2/2016 தொடர்பானது.

அதன் பிரகாரம் கருத்திட்டமொன்றின் உள்ளகக் கணக்காய்வாளராக அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க தொழில்முயற்சியொன்றில் கணக்காளர் ஒருவரை நியமிக்கும் போது அவரது நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக முழு நேர அல்லது பகுதி நேர கருத்திட்டமொன்றில் மாத்திரம் உள்ளகக் கணக்காய்வாளராக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கருத்திட்டத்திக்காக நியமிக்கப்படுகின்ற யாரேனும் உள்ளகக் கணக்காய்வாளரின் மூலம் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளும் போது மேற்சொன்ன கணக்காய்வுப் பணியின் பொறுப்பு, வினைத்திறன், மதிப்பீடு மற்றும் பின்னூட்டல்களை மேற்கொள்ளும் ஆற்றல்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு இதனுடன் காணப்படுகின்ற வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக செயற்படுவது அவசியமானதாகும்.

**பொதுவான விடயங்கள்**

- கருத்திட்டமொன்றின் உள்ளகக் கணக்காய்வாளர் அந்தந்த நிதியாண்டு ஆரம்பிக்க முன்னர் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை இங்கு இணைப்பு 1 இல் உள்ள மாதிரிக்கு இணங்கியதாக தயாரிக்க வேண்டிய அதேவேளையில், அதற்காக தொடர்புடைய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
- கருத்திட்டமொன்றின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரதியொன்றை ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிக்க முன்னர் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484816, 2484500, 2484600, 2484700
අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General: (9411)2484543
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 2449496
වෙබ් අඩවිය / வெப் சைட் / website: www. treasury .gov.lk

- உள்ளகக் கணக்காய்வாளர் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதத்திற்காகவும் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து கணக்காய்வை நடைமுறைப்படுத்த வேண்டிய அதேவேளையில், அது தொடர்பான கணக்காய்வு அறிக்கையை கருத்திட்டப் பணிப்பாளருக்கு பிரதியொன்றைக் கொண்டதாக நிரல் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
- கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 5 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பக்கம் விசேட கவனத்தைச் செலுத்தி, கருத்திட்டத்தின் சகல துறைகளையும் உள்ளடக்கும் விதமாக வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களையும் மாதாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்தல் வேண்டும்.
- ஒவ்வொரு 3 மாதத்திற்கும் ஒருமுறை மாதாந்த கணக்காய்வு அறிக்கையின் மூலம் தீர்க்கப்படாததும் கவனத்திற்கு உட்பட வேண்டியதுமான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையொன்றைத் தயாரிக்க வேண்டிய அதேவேளையில், அதனை செயலாளரின் தலைமையில் இடம்பெறுகின்ற அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
- மேற்சொன்ன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளைக் கொண்டதாக அதில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளை இங்கு இணைப்பு 2 இல் உள்ள மாதிரியினூடாக முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**கருத்திட்டக் கணக்காய்வு சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வாளரின் பணி, செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்**

கருத்திட்ட உள்ளகக் கணக்காய்வாளர்;

- அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற கருத்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உள்ள இணக்கப்பாட்டைப் பரிசீலனை செய்தல் வேண்டும்.
- கருத்திட்டத்தின் அரசிறைக் கட்டுப்பாடு மற்றும் அரசிறை ஒழுக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.
- கருத்திட்டத்தின் வீதிக் குறிகாட்டி மற்றும் செயலாற்றுகை என்பவற்றை உரிய மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதன் தாமதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.
- கருத்திட்டத்தின் கணக்கீட்டுச் செயற்பாடுகள், புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை சரியான தரங்களின் மூலம் பராமரிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.
- கருத்திட்டத்தின் வளங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான உள்ளக நிருவாக முறைமைகளை செயற்படுத்துவதற்கும் அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.
- உள்ளகக் கணக்காய்வாளர் வெறும் அறிக்கையிடுவோரின் பொறுப்பிற்கு வரையறுக்கப்பட்டவராக இல்லாமல் கருத்திட்ட முகாமைத்துவத்தின் சுறுசுறுப்பான உறுப்பினராக கருத்திட்டத்தின் சகல நடவடிக்கைகளிலும் பங்குபற்றி செயற்பாட்டுரீதியாக தமது ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

- உள்ளகக் கணக்காய்வாளர் தமது வருடாந்தக் கணக்காய்வுத் திட்டத்திற்குப் புறம்பாக அமைச்சின் செயலாளரினதும் கருத்திட்டப் பணிப்பாளரினதும் வேண்டுகோளுக்கு அமைவாக தொடர்புடைய கருத்திட்டம் சம்பந்தமான விசேட விசாரணைகளையும் கணக்காய்வையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.
- திறமை, சிக்கனம், வினைத்திறன் மற்றும் தரம் சம்பந்தமான விசேட கவனத்தைச் செலுத்தி கருத்திட்டத்தின் முடிவுறுத்துகை அதன் செலவுகளுக்கு நியாயமானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.
- கருத்திட்டத்தை முடிவுறுத்தும் போது கருத்திட்டத்திற்குச் சொந்தமான சொத்துக்களையும் ஆவணங்களையும் உரிய முறையில் ஒப்படைத்தல் மற்றும் கணக்குகளைச் செலுத்துதல் சம்பந்தமான இறுதிக் கணக்காய்வு அறிக்கையொன்றை செயலாளர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

எஸ்.ஏ.சந்திரிக்கா குலதிலக
பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

பிரதி : சனாதிபதியின் செயலாளர்
பிரதமரின் செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்
கணக்காய்வாளர் அதிபதி
பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

இணைப்பு I

# ................ ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

அமைச்சு :

கருத்திட்டத்தின் பெயர் : ..........................................................

| இல. | உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு | கணக்காய்வின் உப செயற்பாடுகள் | கணக்காய்வு இலக்குகள் | உள்ளகக் கணக்காய்வு நேர வரைசட்டகம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
| 1 | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | |

இணைப்பு 2

அமைச்சு : ..........................................................................................................................

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் - ........................ காலாண்டு

கருத்திட்டம் : ..................................................................................................................

கருத்திட்டத்தின் கணக்காய்வு அவதானிப்புகள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

| இலக்கம் | கணக்காய்வு அவதானிப்புகள் | குழுக் கூட்டத்தின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |